1978 செப்டம்பர் 11]

திரு செ. முத்துசாமி : நாட்டில் அவசர கால நிலைமை இருந்தபோது, இந்த நாட்டிலே உள்ள பேப்பர் கம்பெனிகளால் ஒழுங்காகப் பள்ளிப் பிள்ளைகளுக்குத் தேவைப்படும் பேப்பரைச் சப்ளை செய்ய முடிந்தது. அப்படிச் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று சுதந்திரம் வழங்கிவிட்ட நிலையில், பேப்பர் கம்பெனிகள் தங்கள் இச்சைப்படி நடந்து கொண்டு மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நோட்டுப் புத்தகங்களுக்கான பேப்பரை வழங்காமல் இருக்கின்றனவே. இது மத்திய அரசாங்கத்திற்குத் தெரியாதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : அதுதான் அவசர காலத்தினுடைய நன்மை.

Express and District Routes of Pallavan Transport Corporation.

* 68. *Q.*—Thiru V. R. PERIANNAN: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government to revive the State Transport Department and bring the Express and District Routes of Pallavan Transport Corporation under its control; and

(*b*) if so, the stage at which it now stands ?

பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவு மற்றும் மாவட்டத் தடங்கள்

திரு வி. ஆர். பெரியண்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவு மற்றும் மாவட்டத் தடங்களை மட்டும், மீண்டும் அரசு போக்குவரத்து (State Transport) ஆக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : (அ) இல்லை, (இ) கேள்விக்கு இடமில்லை.

(பிற்பகல் 5-00)

திரு வி. ஆர். பெரியண்ணன் : அந்த எக்ஸ்பிரஸ் பஸ்கள், முதலிலே அரசு பஸ்களாக இருந்தன. அது கார்ப்பரேஷனுக்கு மாற்றப்பட்ட பிறகு அரசு பஸ்ஸாக இருந்த நேரத்திலே அரசு ஊழியர்களாகவும், பிறகு கார்ப்பரேஷன் ஊழியர்களாகவும் இருக்கின்ற நிலைமைகள் ஏற்பட்டன. அரசு ஊழியர்களுக்குக் கொடுத்த சலுகைகள் இப்போது கொடுக்கப்படவில்லை என்ற புகார் வந்ததா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; அப்படிப்பட்ட புகார்கள் வந்தன. அதன் அடிப்படையிலே தான் பேச்சு வார்த்தைகள் நடந்து ஒரு உடன்பாடும் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு கே. எஸ். அப்துல் வகாப்: சென்னை நகரில் ஓடிக் கொண்டிருக்கும் டவுன் பஸ்கள் பல்லவன் டிரான்ஸ்போர்ட் என்ற பெயரில் இருக்கின்றன. துரித பிரயாணத்திற்கு ஒதுக்கியுள்ள பஸ்கள் பல்லவன் என்ற பெயரிலேயே ஓடிக்கொண்டிருக்கின்றன. இதைப் புரிந்துகொள்வது கஷ்டமாக இருக்கிறது. நான் போன் செய்து கேட்கும்போது, குழப்பிக்கொண்டு பதில் சொல்கிறார்கள். இந்தக் குழப்பத்தை நிவர்த்திக்க வழிவகை செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும், சாதாரண பிரயாணத்திற்கு என்றும் விரைவுப் போக்குவரத்துக்கு என்றும் தனித்தனிப் பிரிவாக வைக்கப்பட்டு, தனித்தனி தொலைபேசி எண்களும் கொடுக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தொடர்பு கொள்ள தனி போன் வசதி இருக்கிறது. இதுபற்றிச் சிக்கல் இருப்பதாக அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு அங்கத்தினர் திரு வகாப் அவர்கள் சொன்ன இந்த சிக்கலை தீர்க்க மூன்று பிரிவுகளுக்கும் மூன்று பெரிய தலைவர்களுடைய பெயர்கள் வைத்து மாற்றுவதற்கு ஏதாவது பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அப்படி மாற்றுவதாக எதுவும் பரிசீலனையில் இல்லை. ஆனாலும் பல்லவன் போக்குவரத்தையும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தையும் இணைத்து பெரியார் போக்குவரத்துக் கழகம் என்று வைக்கலாமா என்று எண்ணி வருகிறோம்.

Lands affected by Rains and Flood.

* 69. *Q.*—Thiru A. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state:

(*a*) whether the lands in Senthamangalam, Erumapatti and Mohanoor Panchayat Unions in Salem district, sand casted due to heavy rains and flood in Tamil Nadu during 1977 were reclamated; and

(*b*) if not, when action will be taken?